அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் பாண்டிச்சேரி மற்றும்
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.020389/எச்.1/2020** **நாள் :19 .08.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாமாண்டு துணை தேர்வு செப்டம்பர் 2020 – தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்க கோருதல் – தொடர்பாக.

-----

மார்ச் 2020 பருவத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) / இரண்டாம் ஆண்டு (+2) தேர்வினை பள்ளி மாணவர்களாக எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்கள், தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை மீண்டும் செப்டம்பர் 2020 துணைத் தேர்வில் எழுத அவர்கள் பயின்ற பள்ளிக்கு / தனித்தேர்வர்கள் அவர்கள் மார்ச் 2020 பருவத் தேர்வுகளை எழுதிய தேர்வு மையத்திற்கு 24.08.2020 ( திங்கள் கிழமை) முதல் 27.08.2020 (வியாழக் கிழமை) வரையிலான நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிக்குள் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 28.08.2020 மற்றும் 29.08.2020 ஆகிய தேதிகளில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தேதிகளில் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு வருகைபுரியும் பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஆன்–லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு / தனித் தேர்வர் மையங்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **24.08.2020** காலை முதல் பள்ளி மாணவர்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித் தேர்வர்கள் தேர்வெழுதிய தேர்வு மையத்திற்கும் வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் அவர்கள் மார்ச் **2020** மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) மற்றும் மதிப்பெண் பட்டியலினை (Statement of Marks) ஆய்வு செய்து www.dge.tn.gov.in என்ற website-ல் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2. **மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (புதிய மற்றும் பழைய பாடத்திட்டம்) செப்டம்பர் 2020 பருவத்தில் நடைபெறும் பத்தாம் வகுப்பு துணைத் தேர்வினை எழுத தற்போது மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

3. **26.03.2020 அன்று நடைபெறாமல் இரத்து செய்யப்பட்ட வேதியியல் , புவியியல் , கணக்குப் பதிவியல் (புதிய மற்றும் பழைய பாடத்திட்டம் ) மற்றும் தொழிற்கல்வி கணக்குப் பதிவியல் (பழைய பாடத்திட்டம்) பாடங்களுக்கான மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுத ஏற்கனவே விண்ணப்பித்திருந்த தனித்தேர்வர்கள் மட்டும் செப்டம்பர் 2020 பருவத்தில் நடைபெறும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வின்போது அப்பாடங்களுக்கான தேர்வுகளை எழுத தற்போது மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. மேற்குறிப்பிட்ட தேர்வர்கள் வேதியியல் / புவியியல் / கணக்குப் பதிவியல் / தொழிற்கல்வி கணக்குப் பதிவியல் பாடம் தவிர வேறு பாடங்களில் தேர்ச்சி பெறவில்லையெனில் அப்பாடங்களுக்கான தேர்வுகளை எழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம்.**

4. **01.09.2020** தேதிக்குள் தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த தேர்வுக் கட்டணத் தொகையினையும், சிறப்பு அனுமதிக் கட்டணத்தினையும் சேர்த்து இணையதளம் வாயிலாக செலுத்தவேண்டும்.

5. பள்ளிகள் / தேர்வு மையங்களில் **24.08.2020 ( திங்கள் கிழமை)** முதல் **27.08.2020 (வியாழக் கிழமை)** வரையிலான நாட்களில் பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பங்கள் மற்றும் சிறப்பு அனுமதித் திட்டத்தின் கீழ் **28.08.2020** மற்றும் **29.08.2020** ஆகிய தேதிகள் வரை பெறப்பட்டு பதிவு செய்த

விண்ணப்பங்கள் தொடர்பான விவரம் (Summary report) மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை ஆன் – லைனில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டினையும் சேர்த்து சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் **02.09.2020** அன்று ஒப்படைக்குமாறு பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

6. விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும்பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணையும் தொடர்பு கொள்ள வேண்டும்.

**9498883073**

7. <u>பொதுவான அறிவுரைகள்:-</u>

- **தேர்வர்கள் பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தாங்கள் பயின்ற பள்ளிகள் / தனித்தேர்வு மையங்கள் / சேவை மையங்களுக்கு வரும் பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.**
- **போதிய சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.**
- **கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அனைத்து வழிகாட்டி நெறிமுறைகள், நிலையான செயல்பாட்டு வழிமுறைகள் (SOP) தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.**

செப்டம்பர் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கு தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட தினங்களில் தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் / தனித் தேர்வர் மையங்களில் ஆன்–லைனில் தங்களது விண்ணப்பங்களை பதிவுசெய்திட பள்ளித் தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திடவும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தக்க அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பள்ளிகள் ஏதேனும் இப்பணியினை செய்யாது புகார் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் / ஆசிரியர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உரிய முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4...

எனவே, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் இப்பொருள் குறித்து உரிய அறிவுரை வழங்கிடவும், மேற்படி பணியினை உரிய காலத்தில் முடித்திட உதவிடவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்வு நடத்துவது தொடர்பான வழிமுறைகள் / நெறிமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும்.**

**ஒம்./–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து பள்ளிகள் / தேர்வு மைய தலைமையாசிரியர்கள்
   – முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக (தக்க நடவடிக்கைக்காக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தகவலுக்காக)